


**01. 07. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான கனவை முன்னெடுத்து செல்வதில் இளையோர் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. டிஜிட்டல் இந்தியா, நாட்டின் ஆட்சி முறையை, மறு வடிவமைத்து, ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிகோலியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பாராட்டியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் பொறியியல் சேர்க்கைக்கான மாணாக்கர் கலந்தாய்வு வரும் 13ஆம்தேதி தொடங்கும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் அறிவித்துள்ளார்.

4. இளையோர் அதிக அளவில் ரத்த தானம் செய்ய முன்வர மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண் ராஜ் அழைப்பு விடுத்துள்ளார்.

5. இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி செஸ்டர் லே ஸ்ட்ரீட்-ல் இன்று நடைபெறுகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**********

குடியரசு தலைவர்

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான கனவை முன்னெடுத்து செல்வதில் இளையோர் அறிவுத்திறனுடனும், வலுவான விழுமியங்களுடனும், அர்ப்பணிப்புடனும் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

ஆந்திர மாநிலம் அனந்தபூர் மத்திய பல்கலைகழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், உள்ளடக்கிய வளமான தேசத்தில் இளையோரின் பங்கு இன்றியமையாதது என்று குறிப்பிட்டார்.

மாணவர்களை காட்டிலும் மாணவிகள் பதக்கங்களை குவித்துள்ளதற்கு பாராட்டு தெரிவித்த அவர், மகளிரின் உறுதியான மனப்பாங்கையும் ஆக்கப்பூர்வமான விருப்பங்களையும் இது பறைசாற்றுவதாக குறிப்பிட்டார்.

விரைவான தொழில்நுட்ப வளர்ச்சி ஒவ்வொரு துறையிலும் பல்வேறு மாற்றங்களை கொண்டு வரும் நிலையில் மாணாக்கர் அதனை தொடர்ந்து பயில வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

மாணவர்களின் அறிவுதிறன் சமூகத்திற்கும் விழிம்பு நிலை மக்களுக்கும் பயனளிக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

**********

பிரதமர் – டிஜிட்டல்

டிஜிட்டல் இந்தியா, நாட்டின் ஆட்சி முறையை, மறு வடிவமைத்து, குடிமக்களுக்கு ஆளுமை வழங்கி ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிகோலியுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

டிஜிட்டல் இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டு 11 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் அனைவரின் வாழ்க்கையிலும் அது ஒரு அங்கமாகவே மாறிவிட்டதாக கூறினார்.

தடையற்ற மின்னணு பணபரிவர்த்தனை, நேரடி பண பரிமாற்றங்கள், பயனாளிகளை சென்றடைந்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இலகுவான வாழ்க்கைக்கு, மின்னணு தொழில் நுட்பம், ஆற்றல்மிகு கருவியாக உருவெடுத்துள்ளது என்றார்.

கிராமங்கள், இரண்டு மற்றும் மூன்றடுக்கு நகரங்களுக்கு, டிஜிட்டல் இந்தியாவின் அலை பரவி, புதுமையான சிந்தனைகள் முன்னெடுக்கப்படுவதாக எடுத்துரைத்தார்.

கல்வி, சுகாதாரம், வேளாண்மை, வர்த்தகம், பொது சேவை விநியோகம் உள்ளிட்டவை இதனால் வலுவடைந்துள்ளதாகவும், அனைத்து சவால்களுக்கும் உரிய தீர்வை கண்டறிய முடிவதாகவும் எடுத்துரைத்தார்.

செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர், குவாண்டம், கணினி உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களுக்கு டிஜிட்டல் இந்தியா திறவுகோலாக அமைந்ததுடன், வேகமான வளர்ச்சி அடையும் நாடாக இந்தியாவை முன்னெடுத்து சென்றுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எதிர்காலங்களில், மனித குலத்திற்கு சேவையாற்றி, அனைவரின் வாழ்க்கையிலும், ஆளுமையை உறுதி செய்து, நிலையான வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையிலான தொழில்நுட்பத்தை உருவாக்குவதே, அரசின் உயர் முன்னுரிமையாக இருக்கும் என்று பிரதமர் எடுத்துரைத்தார்.

**********

<u>அமித்ஷா - டிஜிட்டல்</u>

மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா வெளியிட்டுள்ள செய்தியில் நாட்டில் உள்ள 103 கோடிக்கும் அதிகமான மக்கள் தற்போது இணையத்துடன் ஒன்றிணைந்திருப்பதாகவும், 2 லட்சத்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்கள் பாரத் நெட் அமைப்புடன் இணைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

நேரடி பண பரிவர்த்தனை மூலம் 51 லட்சம் கோடி

பயனாளிகள் பயனடைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் வளர்ச்சி பாதையில் முக்கிய அங்கமாக டிஜிட்டல் மயம் உருவெடுத்து புதுமையான சிந்தனைகள் ஸ்டார்ட் அப் தொழிற்சாலைகளுக்கு உத்வேகமாக அமைந்துள்ளதாக கூறினார்.

**********

மருத்துவர்கள் தினம்

தேசிய மருத்துவர்கள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு.நரேந்திரமோடி, அமைச்சர்கள் திரு.அமித்ஷா, திரு.ஜே.பி.நட்டா தமிழக முதலமைச்சர் திரு.விஜய் உள்ளிட்டோர் மருத்துவர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

சுகாதார கட்டமைப்பில் மருத்துவர்களின் இன்றியமையா பணியை பாராட்டியுள்ள தலைவர்கள் நெருக்கடியான தருணத்தில் அவர்களது அளப்பரிய அயரா சேவை எண்ணற்ற மக்களிடம் நம்பிக்கையையும் நன்றியுணர்வை ஈட்டியுள்ளதாக பாராட்டியுள்ளனர்.

திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை டீன் டாக்டர் எஸ்.குமாரவேல் மருத்துவர் தினத்தின் முக்கியத்துவம் குறித்து எமது செய்திபிரிவிடம் பேசுகையில்

--வாய்ஸ்

இந்நாளை ஒட்டி தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் மினி மாரத்தான் மற்றும் வாக்கத்தான் போட்டிகள் நடைபெற்றன.

**********

ஜி.ராம்.ஜி

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் இன்றுமுதல் நாட்டின் அனைத்து கிராமப்புறங்களிலும் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன்மூலம் கிராமப்புற வேலைவாய்ப்பு, வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நிலையான கிராம மேம்பாட்டிற்கான வலுவான கட்டமைப்பு உருவாகும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்திற்காக மத்திய அரசு தமிழகத்திற்கு ஏழாயிரத்து 957 கோடியே 57 லட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளது குறிப்பிடத்துக்கது.

**********

தீரஜ் சேத்

நம் நாட்டின் ராணுவத்தை அதி நவீனபடுத்துவதற்கான பணிகள் உயர் முன்னுரிமையுடன் மேற்கொள்ளப்படும் என ராணுவ தளபதி ஜென்ரல் தீரஜ் சேத் தெரிவித்துள்ளார்.

இந்திய ராணுவத்தின் 31ஆவது தளபதியாக இன்று பொறுப்பேற்ற அவர், எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்கான அனைத்து தொழில்நுட்ப நிலைப்பாடுகளுடன் ராணுவம் மறு கட்டமைப்பு செய்யப்படும் என்று குறிப்பிட்டார்.

எல்லை பகுதிகளில் விழிப்புடன் கண்காணிப்புகளை மேற்கொண்டு செயல் திறமையுடன் எவ்வித அச்சுறுத்தலையும் சமாளிக்கும் படைப்பாற்றல் அணுகுமுறைகளுடனும் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளும் புதிய தொழில்நுட்பங்களுடனும் ராணுவ படைகள் எழுச்சியுடன் திகழும் என்று உறுதியளித்துள்ளார்.

**********

வணிக சிலிண்டர்

நாட்டில் 19 கிலோ வணிக பயன்பாட்டிற்கான எரிவாயு சிலிண்டரின் விலை 183 ரூபாய் 50 காசுகள் இன்று குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி சென்னையில் சிலிண்டர் விலை 172 ரூபாய் 50 காசுகள் குறைந்து 3 ஆயிரத்து 106 ரூபாயாக விற்பனையாகிறது.

இருப்பினும் வீட்டு உபயோக சிலிண்டர் விலையில் எந்த மாற்றமும் இல்லை.

**********

த.வெ.க கூட்டம்

த.வெ.க தலைவரும், முதலமைச்சருமான திரு.ஜோசப் விஜய் தலைமையில் தோழமை கட்சிகளின் முதல் கூட்டம் சென்னையில் இன்று நடைபெறுகிறது.

கூட்டணியின் பெயர் உள்ளிட்டவை குறித்து இதில் முடிவாகும் என தெரிகிறது.

காங்கிரஸ், மதிமுக, விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உள்ளிட்ட கட்சிகள் இதில் பங்கேற்கின்றன.

இதனிடையே முதலமைச்சரை சென்னை தலைமை செயலகத்தில் இன்று சந்தித்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர்கள் இன்றைய கூட்டத்தில் தங்களது கட்சி கலந்துகொள்ளவில்லை என்றும் த.வெ.க.விற்கு வெளியிலிருந்து நிபந்தனையற்ற ஆதரவை அளிப்பதாகவும் கூறியுள்ளனர்.

திமுக-வில் அமைக்கப்பட்டுள்ள 10 பேர் கொண்ட மறுசீரமைப்பு ஆலோசனை குழுவினருடன் நாளை ஆலோசனை மேற்கொள்ளப்போவதாக கட்சியின் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இந்நிலையில் அஇஅதிமுகவின் மகளிர் அணி நிர்வாகிகளுடன் கட்சியின் பொதுச்செயலாளர்

திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி முக்கிய ஆலோசனைகளை மேற்கொள்கிறார்.

சட்டப்பேரவை தேர்தல் தோல்வி, வளர்ச்சி பணிகள் உள்ளிட்டவை குறித்து இதில் விவாதிக்கப்படும் என தெரிகிறது.

**********

பொறியியல்

தமிழ்நாட்டில் இளநிலை பொறியியல் சேர்க்கைக்கான மாணாக்கர் கலந்தாய்வு வரும் 13ஆம்தேதி தொடங்கும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

நடப்பாண்டு மாணாக்கர் சேர்க்கைக்கான தரவரிசை பட்டியலை சென்னையில் இன்று வெளியிட்டு பேசிய அவர், வரும் 13ஆம் தேதிமுதல் 17ஆம் தேதிவரை மாற்றுத்திறனாளிகள், அரசு பள்ளி சிறப்பு ஒதுக்கீட்டு பிரிவினருக்கான கலந்தாய்வு நடைபெறும் என்றார்.

அரசு பள்ளி மாணாக்கருக்கான ஏழரை சதவிகித உள் இட ஒதுக்கீட்டின்படி 46 ஆயிரத்து 604 பேர் விண்ணப்பித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஜூலை 20ஆம் தேதிமுதல் - ஆகஸ்ட் 30ஆம் தேதிவரை பொது பிரிவினருக்கான கலந்தாய்வு ஆன்லைன் மூலம் நடைபெறும் என்றார்.

**********

அருண் ராஜ்

தமிழகத்தில், இளையோர் அதிக அளவில் ரத்த தானம் செய்ய முன்வர வேண்டும் என்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண் ராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை ஓமாந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், போதை பொருள் பழக்கத்தால் ரத்த

கொடையாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக கூறினார்.

போதை பொருள் பழக்கத்தை இளையோரிடையே முற்றிலும் ஒழிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

வாய்ஸ்

**********

ஆதவ் அர்ஜுனா

பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறைகளில் ஒப்பந்தத்திற்காக பணம் கொடுத்து ஏமாந்தவர்களோ, பாதிக்கப்பட்டவர்களோ புகார் தெரிவிக்கலாம் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜுனா கூறியுள்ளார்.

சென்னையில் இன்று இதனை தெரிவித்த அவர், தம்மிடம் நேரடியாகவோ, மின்னஞ்சல் முகவரி மூலமாகவோ புகார் அளிக்கலாம் என்று கூறினார்.

இத்தகைய புகார்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களின் பணம் மீட்டு தரப்படும் என்றார்.

**********

நீர்வளத்துறை ஆனந்த்

தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி துறையில் டெண்டர் பதிவு குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை மாநில நீர்வளம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.ஆனந்த் சென்னையில் இன்று வெளியிட்டார்.

டெண்டருக்கான வங்கி உத்தரவாதம் மின்னணு வடிவில் இருந்தாக வேண்டும் என இதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஒரு மாவட்டத்திற்குள் பதிவு செய்த ஒப்பந்ததாரர்கள், அதற்கான டெண்டரில் பங்கேற்க தகுதியானவர்கள்.

நீர்நிலையை புனரமைக்க விரும்பும் நிறுவனங்கள், அமைப்புகள், உள்ளிட்டவை சம்மந்தப்பட்ட மாவட்ட

ஆட்சியரிடம் விரிவான திட்ட அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் உள்ளிட்ட நெறிமுறைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

**********

<u>அன்புமணி</u>

கர்நாடக அரசு மேகதாது அணை திட்டத்தை கைவிட வலியுறுத்தி பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி பிலிகுண்டுலுவில் விழிப்புணர்வு பயணத்தை இன்று தொடங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமது நான்கு நாட்கள் விழிப்புணர்வு பயணம் சேலம் கரூர் திருச்சி மயிலாடுதுறை மாவட்டங்கள் வழியாக பூம்புகாரில் நிறைவடையும் என்றார்.

**********

<u>ஆர்.எஸ்.பாரதி</u>

த.வெ.க தலைவர் குதிரை பேரத்தில் நேரடியாக ஈடுபட்டதாக கூறி திமுக சார்பில் தமிழக ஆளுநருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அக்கட்சியின் அமைப்பு செயலாளர் திரு.ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில் ம.தி.மு.க பொதுச்செயலாளர் திரு.வைகோ செய்தியாளர்களிடம் பேசியதை சுட்டிக்காட்டி ஆளுநர் இதுதொடர்பாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறைக்கு உத்தரவிட்டு உரிய நடவடிக்கை எடுக்க அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாக கூறினார்.

**********

<u>நாகை</u>

நாகை மாவட்டத்தில் இயல்பை காட்டிலும் வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தனி சிகிச்சை பிரிவு அமைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

**********

<u>கோமாரி நோய்</u>

திருச்சி அரியலூர் நாகை கடலூர் விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் இன்று தொடங்கியது.

**********

<u>திருச்செந்தூர்</u>

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலுக்குள் பக்தர்கள் கைபேசி எடுத்து செல்ல தடை இன்றுமுதல் அமலுக்கு வந்துள்ளது.

நவீன கருவி மூலம் சோதனைக்கு பின்னரே பக்தர்கள், அனுமதிக்கப்படுகின்றனர்.

**********

<u>கிரிக்கெட்</u>

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி செஸ்டர் லே ஸ்ட்ரீட்-ல் இன்று நடைபெறுகிறது.

ஷ்ரேயாஸ் அய்யர் தலைமையிலான இந்திய அணியில் வைபவ் சூர்யவன்ஷி, அபிஷேக் ஷர்மா, ரவி பிஸ்னாய் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையே ஐந்து 20-20 போட்டிகளும்,

3 ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளும் வரும் 19ஆம் தேதிவரை இங்கிலாந்தின் பல்வேறு இடங்களில் நடைபெற உள்ளன.

**********

## பேட்மிண்டன்

கனடா ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் – மலேசியாவின் லீயை இன்று எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் முதல் சுற்று ஆட்டங்களில் ஆகர்ஷி கஷ்யப், தேவிகா சிஹாக் இன்று களமிறங்குகின்றனர்.

**********